සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

හින්දු ශිෂ්ටාචාරය I
இந்து நாகரிகம் I
Hindu Civilization I

46 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** 'நமசிவாய' என்னும் சிவனுக்குரிய பஞ்சாட்சர மந்திரத்தினை முதன்முதல் குறிப்பிடும் நூல்
(1) இருக்கு வேதம் (2) யசுர் வேதம் (3) சாம வேதம்
(4) அதர்வ வேதம் (5) தனுர் வேதம்

**2.** சிந்துவெளி நாகரிகம் நிலவிய இடங்களில் ஒன்றாகிய 'ஹரப்பா நகரம்' எங்கு அமைந்துள்ளது?
(1) வங்காளதேசம் (2) நேபாளம் (3) மகாராஷ்டிரா
(4) அஸாம் (5) மேற்குப் பஞ்சாப்

**3.** 'மனுஸ்மிருதி' என்ற நூல் சிறப்பித்துக் கூறும் விடயம்
(1) இந்துக் கலைகள்
(2) திருக்கோயிற் கிரியைகள்
(3) இந்து அரசியல் நீதிபரிபாலனம்
(4) வடநாட்டுப் பக்தி மரபு
(5) மருத்துவம்

**4.** 'என்னைத் தீமையில் இருந்து நன்மைக்கு இட்டுச் செல்வாயாக' எனக் கூறுவது
(1) பிருகதாரண்ய உபநிடதம் (2) முண்டக உபநிடதம் (3) தைத்திரிய உபநிடதம்
(4) கேன உபநிடதம் (5) சாந்தோக்கிய உபநிடதம்

**5.** பகவத்கீதை கூறும் அவதாரக் கோட்பாட்டின் முக்கிய நோக்கம்
(1) திருக்கோயில் மரபினைப் போற்றுதல்
(2) சைவசமய சின்னங்களைச் சிறப்பித்தல்
(3) விக்கிரகக்கலை மரபை வலியுறுத்தல்
(4) தர்மத்தை நிலைபெறச் செய்தல்
(5) தலயாத்திரையைப் போற்றுதல்

**6.** இந்து - இஸ்லாமிய சமயக் கோட்பாடுகளை இணைத்து நோக்கிய பக்திநெறியாளர்
(1) இராமதாசர் (2) மீராபாய் (3) கபீர்தாசர்
(4) துளசிதாசர் (5) ஸ்ரீ சைதன்யர்

**7.** 'வேதாந்த தீபம்' என்ற நூலின் ஆசிரியர் யார்?
(1) பாதராயணர் (2) சங்கரர் (3) ஸ்ரீ இராமானுஜர்
(4) கௌடபாதர் (5) மத்துவர்

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



8. அன்பை விளக்காகவும் ஆர்வத்தை நெய்யாகவும் கொண்டு ஆன்ம ஒளி விளக்கேற்றி வழிபாடு செய்தவர்கள் யாவர்?
   (1) ஆழ்வார்கள் (2) திகம்பரர்கள் (3) மாகதர்கள்
   (4) மாத்தியாமிகர்கள் (5) சூதர்கள்

9. மனித வரலாற்றில் பண்பாட்டின் உயர் எல்லையைக் காட்டுவது
   (1) அரசியல் (2) வானசாஸ்திரம் (3) நாகரிகம்
   (4) பொருளாதாரம் (5) ஊடகம்

10. கம்போடியாவில் இந்துப் பண்பாட்டை ஆதரித்த கிமர் அரச வம்சத்துக்குரிய மன்னன்
   (1) விக்கிரமன் (2) யசோவர்மன் (3) பலதேவன்
   (4) அஜாதசத்துரு (5) விமலதர்மன்

11. கலைகளின் சிறப்பைப் போற்றும் 'நாட்டிய சாஸ்திரம்' என்ற நூலின் ஆசிரியர் யார்?
   (1) வால்மீகி (2) பரதமுனிவர் (3) அபிநவகுப்தர்
   (4) யாக்ஞவல்கியர் (5) வியாசர்

12. 'சிவனுக்கு மேல் தெய்வம் இல்லை; அவனே முழுமுதற்கடவுள்' எனக்கூறும் கல்வெட்டு காணப்படும் இடம்
   (1) மாமல்லபுரக் கணேசர் கோயில்
   (2) மாமல்லபுரக் கடற்கரைக் கோயில்
   (3) சீயமங்கலக் கோயில்
   (4) காஞ்சி கைலாசநாதர் கோயில்
   (5) மண்டகப்பட்டு கோயில்

13. யாவாவில் சிவநெறி தழுவி, ஆயிரம் அந்தணர்களுக்குத் தானம் வழங்கிய மன்னன்
   (1) சூரியவர்மன் (2) பத்திரவர்மன் (3) பவவர்மன்
   (4) 2 ஆம் ஜெயவர்மன் (5) பூரணவர்மன்

14. "கலை உருவாக்கம் என்பது தூய உளச்செயற்பாடு" எனக் கூறிய ஈழத்து அறிஞர்
   (1) கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி
   (2) சுவாமி விபுலாநந்தர்
   (3) காசிவாசி செந்திநாதையர்
   (4) பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள்
   (5) வித்துவான் ச. பூபாலபிள்ளை

15. 'பௌஷ்டிகாணி' எனும் மந்திரம் சிறப்பாகக் குறித்து நிற்கும் விடயம்
   (1) பெண்களுக்கு சுபீட்சம் அளிப்பது
   (2) நீண்ட ஆயுளைத் தருவது
   (3) உழவனுக்கும் வர்த்தகனுக்கும் செல்வச் செழிப்பை அளிப்பது
   (4) அரசர்களுக்கு நன்மை அளிப்பது
   (5) பிராயச்சித்தம் அளிப்பது

16. ரௌரவ ஆகமப் பொருளை விளக்கும் சைவசித்தாந்த சாத்திர நூல்
   (1) சிவப்பிரகாசம் (2) சிவஞானபோதம் (3) வினாவெண்பா
   (4) சிவஞானசித்தியார் (5) திருவருட்பயன்

17. புராதன காலத்தில் 'திருத்தம்பலேஸ்வரம்' என அழைக்கப்பட்ட திருத்தலம்
   (1) திருக்கேதீச்சரம் (2) முன்னேச்சரம் (3) வானவன் மாதேவீச்சரம்
   (4) நகுலேச்சரம் (5) திருக்கோணேச்சரம்

18. விக்கிரகக் கலைமரபில் ஐந்தொழில் தத்துவத்தையும் திருவைந்தெழுத்தையும் வெளிப்படுத்தும் விக்கிரகம்
   (1) இலிங்கோற்பவர் (2) விநாயகர் (3) நடராசர்
   (4) சந்திரசேகரர் (5) தட்சணாமூர்த்தி

19. புராதன இந்திய மருத்துவ மரபில் பெரும் புகழ் பெற்றவர்
   (1) ஸ்ரீதரர் (2) பாஸ்கராசாரியார் (3) ஆரியப்பட்டர்
   (4) தன்வந்திரி (5) வராகமிகிரர்

[பக். 3 ஐப் பார்க்க

**20.** 'சங்கீர்ணஜாதி' எனச் சிறப்பிக்கப்பட்ட மன்னன் யார்?
(1) நந்திவர்மன் (2) இராசசிம்மன் (3) சிம்மவிஷ்ணு
(4) நரசிம்மவர்மன் (5) மகேந்திரவர்மன்

**21.** பௌத்தம் கூறும் பஞ்சசீலத்துள் இடம்பெறும் இரண்டு ஒழுக்கங்கள் அடங்கிய தொகுதி
(1) கருணை, திருடாமை
(2) மது அருந்தாமை, காமம் இன்மை
(3) உயிர்களைக் கொல்லாமை, தியானம்
(4) களியாட்டத்தைத் தவிர்த்தல், பொய்யுரைக்காமை
(5) அகால உணவு ஏற்காமை, காமம் இன்மை

**22.** 'விறகில் தீ போல் பிரம்மதத்துவம் மறைந்துள்ளது' எனக் குறிப்பிடும் உபநிடதம்
(1) முண்டக உபநிடதம்
(2) ஐதரேய உபநிடதம்
(3) மாண்டுக்கிய உபநிடதம்
(4) சுவேதாஸ்வர உபநிடதம்
(5) கடோபநிடதம்

**23.** சைவசித்தாந்த சிந்தனை விளக்கத்தில் ஒரு காரியத்திற்குக் காரணமான சம்பவத்தை ஊகித்தறிய உதவும் பிரமாணத்தின் பெயர்
(1) பிரத்தியட்சம் (2) ஆப்தவாக்கியம் (3) அனுமானம்
(4) வியாபகம் (5) வியாப்பியம்

**24.** இறைவனின் அருவுருவத் திருமேனியாகக் கொள்ளப்படுவது
(1) நாதம் (2) சக்தி (3) சதாசிவம்
(4) உருத்திரன் (5) மகேஸ்வரன்

**25.** சிவாகமம் கூறும் கிரியாபாதம் குறிப்பிடும் திருக்கோயிலோடு தொடர்புபடும் நான்கு விடயங்களில் 'பிரதிஷ்டை' என்பது
(1) திருக்கோயிலுக்குரிய நிலத்தை உழுது பண்படுத்துவது
(2) ஆலயக் கிரியைகளில் ஏற்படும் தவறுகளை நிவர்த்தி செய்வது
(3) உற்சவங்களை மேற்கொள்வது
(4) மக்களது பக்திச் சிறப்பை விளக்குவது
(5) ஆலயத்தில் திருவுருவங்களை நிறுவுவது

**26.** 'உண்மை பேசுதல்' என்ற விழுமியப் பண்பைப் பிரதிபலிக்கும் புராண கதாபாத்திரம்
(1) துர்வாசர் (2) நாரதர் (3) ருக்மாங்கதன்
(4) விஸ்வாமித்திரர் (5) கௌதமன்

**27.** மனித உடலின் ஆறு ஆதாரங்களுடனும் அட்டமாசித்திகளுடனும் தொடர்புடைய சிவாகமப்பிரிவு
(1) சரியாபாதம் (2) வித்யாபாதம் (3) யோகபாதம்
(4) கிரியாபாதம் (5) ஞானபாதம்

**28.** குப்தர்காலக் கோயில்களுள் ஒன்று
(1) பனைமலைக் கோயில்
(2) முக்தேஸ்வரர் கோயில்
(3) வீரட்டானேஸ்வரர் கோயில்
(4) மதங்கேஸ்வரர் கோயில்
(5) தியோகா தசாவதாரக் கோயில்

**29.** 'மதங்கசூளாமணி' எனும் நாடக நூலின் ஆசிரியர் யார்?
(1) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் (2) சிவபாதசுந்தரனார் (3) சுவாமி விபுலாநந்தர்
(4) சுவாமி ஞானப்பிரகாசர் (5) கலையரசு சொர்ணலிங்கம்

**30.** ஆதிபர்வம் தொடக்கம் மோட்சபர்வம் வரை பதினெட்டு பர்வங்களைக் கொண்ட நூல் யாது?
(1) பாகவதம் (2) சிவரகசியம் (3) கிராதார்ஜுனியம்
(4) மகாபாரதம் (5) இராமாயணம்

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



31. அத்வைத வேதாந்தக் கோட்பாட்டைச் சிறப்பாக நடைமுறை வாழ்வியலுடன் இணைத்துக்காட்டிய இந்து சமய மறுமலர்ச்சி சிந்தனையாளர்
(1) அன்னி பெசன்ட் அம்மையார் (2) துளசிதாசர் (3) மீராபாய்
(4) இராமதாசர் (5) ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்

32. 'ஆடல்வல்லான்' என்ற நடராச சின்னத்தை அனைத்து நிலைகளிலும் பயன்படுத்தியவர்கள்
(1) பல்லவர்கள் (2) சோழர்கள் (3) சேரர்கள்
(4) சாளுக்கியர்கள் (5) நாயக்கர்கள்

33. உபநிடதச் சிந்தனைகளின் சாரமாக அமைந்த 'பிரமசூத்திரம்' என்ற நூலை இயற்றியவர் யார்?
(1) யாக்ஞவல்கியர் (2) வசிட்டர் (3) நாரதர்
(4) பாதராயணர் (5) நிம்பாக்கர்

34. காசிவாசி செந்திநாதையர் இயற்றிய நூல்களில் இரண்டினைக் கொண்ட தொகுதி
(1) ஞானரத்தினாவளி, சைவவேதாந்தம்
(2) பிரபுலிங்கலீலை, வேதாந்தசூடாமணி
(3) பராபரக்கண்ணி, பரிபூரணானந்தம்
(4) சிவயோகசாரம், சிவயோகரத்தினம்
(5) சைவசமயசிந்தாமணி, மெய்ஞ்ஞானதீபம்

35. இலங்கையின் மலையகத்தில் வழிபடப்படும் தனிச் சிறப்புடைய தெய்வம்
(1) சிவன் (2) பைரவர் (3) தட்சணாமூர்த்தி
(4) திரௌபதியம்மன் (5) ஸ்ரீ முத்துமாரியம்மன்

36. "முக்தி நிலையிலும் சீவனும் ஈஸ்வரனும் இரண்டாகவே இருக்கும்" எனக் குறிப்பிட்டவர்
(1) இராமானுஜர் (2) வல்லபர் (3) மத்துவர்
(4) ஸ்ரீ சைதன்யர் (5) சங்கரர்

37. தஞ்சாவூர் மாவட்டத்தில் துளஜாப் பட்டினத்தில் அமைந்துள்ள கோயில் யாருக்குரியது?
(1) இராஜராஜன் (2) ஔவையார் (3) இளங்கோவடிகள்
(4) ஆண்டாள் (5) காரைக்காலம்மையார்

38. இந்துக்கல்விப் பாரம்பரியத்தில் ஆச்சாரியனிடமிருந்து உபாத்தியாயன் வேறுபடுவதற்கான அடிப்படைக் காரணமாக அமைவது
(1) மாணவனின் இல்லந்தேடி வந்து கற்பிக்கின்றமை
(2) அரச குமாரர்களுக்கு மட்டும் போதிக்கின்றமை
(3) இலக்கியங்களை மட்டும் கற்பிக்கின்றமை
(4) உலகியலறிவைத் தரும் கருவி நூல்களைப் போதிக்கின்றமை
(5) கிருகஸ்தர்களுக்கும் கற்பிக்கின்றமை

39. பல்வர்காலக் கோயிற் கட்டடக் கலையில் 'மாமல்லன்' எனச் சிறப்பிக்கப்படும் முதலாம் நரசிம்மவர்மன் ஆற்றிய தனித்துவமான பணியாகக் கருதப்படுவது
(1) கற்றளிக் கோயில்களை நிர்மாணித்தமை
(2) குடைவரை அமைப்பு முறையினை அறிமுகஞ் செய்தமை
(3) தனிக்கல்லாலான நந்தியை அமைத்தமை
(4) இரதக் கோயில்கள் எனப்படும் மலைதளிகளை அமைத்தமை
(5) திருச்சுற்றாலைகளை அமைக்கும் முறையினை அறிமுகஞ்செய்தமை

40. புருடார்த்தங்களில் அறத்திற்கும் இன்பத்திற்கும் இடையில் பொருள் வைக்கப்படுவதன் உட்கருத்து யாது?
(1) அறமல்லாத வழியில் பொருளை ஈட்ட முடியும்.
(2) இன்பத்திற்குப் பொருள் அவசியமில்லை.
(3) அறத்தின் வழி பொருளீட்டி இன்பத்தை அனுபவிக்க வேண்டும்.
(4) புருடார்த்தங்களில் பொருளே முக்கியமானது.
(5) பொருள் இல்லையெனில் வீடுபேறு அடையமுடியாது.

[பக். 5 ஐப் பார்க்க

● **41** தொடக்கம் **45** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள கூற்றுகளை வாசித்து, அவற்றுக்கு மிகப் பொருத்தமானவற்றை பின்வரும் அட்டவணையில் **I, II, III, IV** ஆகிய நிரல்களிலிருந்து தெரிவுசெய்க.

| I | II | III | IV |
|---|---|---|---|
| A<br>தேனுவரைப் பெருமாள் | F<br>இராஜசாசனம் | K<br>திருக்கரசைப் புராணம் | P<br>அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம் |
| B<br>நாமசங்கீர்த்தனம் | G<br>இராமலிங்க முனிவர் | L<br>சபாபதி சோதிடர் | Q<br>யாக்ஞவல்கியர் |
| C<br>அர்த்தசாஸ்திரம் | H<br>ஆகமப்பிரியன் | M<br>காஞ்சி கைலாசநாதர் கோயில் | R<br>சைவசித்தாந்தமார்க்கன் |
| D<br>மாமல்லபுரம் கடற்கரைக் கோயில் | I<br>நந்திச் சின்னம் | N<br>வியவகாரம் | S<br>நாயகன் - நாயகி பாவனை |
| E<br>சேதுகாவலர் | J<br>சரணாகதி | O<br>பிரபக்தி | T<br>சரசோதிமாலை |

**41.** ஈழத்தில் காலக்கணிப்பு இலக்கியங்களோடு தொடர்புடைய தொகுதி யாது?
(1) A, G, L, T (2) B, H, K, S (3) C, H, O, T (4) D, J, K, P (5) E, H, N, R

**42.** இந்துக்களின் சட்ட முறைமைகளுடன் தொடர்புடைய தொகுதி யாது?
(1) B, H, M, Q (2) C, F, N, Q (3) D, H, K, P (4) E, J, L, T (5) E, J, O, S

**43.** வட இந்திய பக்தி நெறியாளர்களுடன் தொடர்புடைய தொகுதி யாது?
(1) A, I, L, R (2) A, I, O, T (3) B, G, L, S (4) B, J, O, S (5) E, F, L, P

**44.** இராசசிம்ம மன்னனின் சைவசமயப் பணிகளோடு தொடர்புடைய தொகுதி யாது?
(1) A, I, L, T (2) B, F, O, P (3) B, G, O, R (4) C, H, L, R (5) D, H, M, R

**45.** ஆரியச் சக்கரவர்த்திகள் கால இந்து சமய வளர்ச்சியுடன் தொடர்புடைய தொகுதி யாது?
(1) A, H, L, R (2) A, H, L, Q (3) B, H, M, S (4) E, I, K, P (5) E, H, M, Q

[பக். 6 ஐப் பார்க்க

- **46** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

**46. மலேசியாவும் இந்துப் பண்பாடும்**

(1) ‘கடாரம்’ என்று இந்து வரலாற்று மூலங்களில் சுட்டப்பட்டுள்ளது.
(2) முருகனுக்குரிய புகழ்பெற்ற ஆலயமான பத்துமலைக் குகைக்கோயில் இங்கே அமைந்துள்ளது.
(3) முதலாம் இராஜராஜ சோழனின் படையெடுப்புக்கு உட்பட்டது.
(4) தைப்பூசம், தீபாவளி முதலிய இந்துப் பண்டிகைகள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.
(5) மணிக்கிராமத்தினரால் திருமால் கோயில் அமைக்கப்பட்டது.

**47. சைவப்புலவர் கா. அருணாசலதேசிகர்**

(1) வித்தியாநுபாலன யந்திரசாலையை நிறுவியவர்.
(2) தேசிகமணி என்ற விருதுப்பெயர் பெற்றவர்.
(3) சுவாமி விபுலாநந்தருடன் இணைந்து பணியாற்றியவர்.
(4) மட்டக்களப்பு சுதேச இயக்கத்தில் பங்கேற்றவர்.
(5) சைவசமய சிந்தாமணி என்ற நூலின் ஆசிரியர்.

**48. புராணங்கள் இந்துப் பண்பாட்டின் கருவூலம்**

(1) புராணங்கள் தமிழ் மூவாயிரம் என அழைக்கப்படுகின்றன.
(2) இந்துத் தெய்வீக வரலாற்றிற்குப் புராணங்களின் அறிவு மிகவும் அவசியமானது.
(3) புராணங்கள் ஐவகை லட்சணங்களைக் கொண்டவை.
(4) புராணம் என்ற சொல் ‘பழமை வாய்ந்தது’ என்ற பொருளைத் தரும்.
(5) திருக்கோயில் வழிபாடு, விரத மகிமை, தீர்த்த மகிமை, தலயாத்திரை என்பன பற்றிக் கூறுவன.

**49. திருக்கோணேச்சரத் திருத்தலம்**

(1) இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ளது.
(2) புராணங்கள், இதிகாசங்களில் இவ்வாலயம் பற்றிய தகவல்கள் உண்டு.
(3) தேவாரப் பாடல் பெற்ற தலமாகும்.
(4) திருக்கோணேச்சரநாதரது தேவியின் திருநாமம் கௌரி அம்பாள் ஆகும்.
(5) குளக்கோட்ட மன்னன் இவ்வாலயத்திற்கு குளம் அமைத்தான்.

**50. ஊடகமும் இந்து சமுதாயமும்**

(1) அச்சு ஊடக வகையினுள் அடங்கும் பஞ்சாங்கங்கள் இந்து சமய பண்பாட்டைப் பேணுவதற்குப் பங்களிப்பை நல்குகின்றன.
(2) மரபுவழி ஊடகச் சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி ஆகியவை இந்து ஆலய உற்சவங்களை நேரடியாக அஞ்சல் செய்கின்றன.
(3) இன்று இந்து சமயக் கருத்துக்களை வினைத்திறனுடன் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வது இணையத்தினால் சாத்தியப்படுகிறது.
(4) இலங்கையின் இந்து சமய மறுமலர்ச்சிக்கு இந்துசாதனப் பத்திரிகை காத்திரமான பங்களிப்பை வழங்கியது.
(5) இன்றைய இளைய சமுதாயத்தினர் விரும்பும் வகையில் இதிகாசங்கள் தொலைக்காட்சித் தொடர்களாகத் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பப்படுகின்றன.

❊ ❊ ❊

AL/2026/46/T-II

ஸ்ரீலங்கா / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

හින්දු ශිෂ්ටාචාරය II
இந்து நாகரிகம் II
Hindu Civilization II

46 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ **பகுதி I** இலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இலிருந்து எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** வேதகால மக்களின் சமய நம்பிக்கைகளின் சிறப்பம்சங்களை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

(அ) வேதகாலத்தில் வழிபடப்பட்ட தெய்வங்கள் (04 புள்ளிகள்)

(ஆ) வழிபாட்டின் பிரதான நோக்கங்கள் (04 புள்ளிகள்)

(இ) தனிமனித வாழ்வும் சமூகமும் (06 புள்ளிகள்)

(ஈ) தத்துவ சிந்தனைகள் (06 புள்ளிகள்)

**2.** விஜயநகர நாயக்கர் ஆட்சிக்காலத்தின் இந்துப் பண்பாடு குறித்து மேல்வரும் தலைப்புகளில் பரிசீலிக்குக.

(அ) விஜயநகர ஆட்சியின் தோற்றம் (04 புள்ளிகள்)

(ஆ) இந்து சமய இலக்கியங்கள் (08 புள்ளிகள்)

(இ) சைவ வைணவ வளர்ச்சி (08 புள்ளிகள்)

**3.** இலங்கையின் இந்து சமய வரலாற்றில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

(அ) ஆறுமுகநாவலர் தோன்றிய காலச் சூழல் (06 புள்ளிகள்)

(ஆ) சைவசமய மறுமலர்ச்சியில் ஆறுமுகநாவலரின் பங்களிப்பு (14 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

[பக். 2 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
Past Papers Wiki

## பகுதி II

**4.** சைவசித்தாந்த தத்துவ மரபில் இடம்பெறும் மேல்வரும் விடயங்களை விளக்குக.

(அ) ஆன்மாவும் ஆணவமும் (06 புள்ளிகள்)

(ஆ) கன்மமும் மறுபிறப்பும் (07 புள்ளிகள்)

(இ) மாயையும் பிரபஞ்சமும் (07 புள்ளிகள்)

**5.** இந்து வானியல் மரபில் மேல்வருவன தொடர்பில் தெளிவுபடுத்துக.

(அ) வேதகால வானியல் சிந்தனைகள் (06 புள்ளிகள்)

(ஆ) ஆரியப்பட்டரும் வராகமிஹிரரும் (07 புள்ளிகள்)

(இ) தமிழக வானியல் சிந்தனைகள் (07 புள்ளிகள்)

**6.** ஆதிசங்கரரது அத்வைத வேதாந்தத்தின் அடிப்படைகளை இராமானுஜரது விசிட்டாத்துவைத வேதாந்தத்துடன் ஒப்பிட்டாராய்க.

(20 புள்ளிகள்)

**7.** இந்து விக்கிரகக் கலையில் 'அனந்தசயன' வடிவத்தின் சிறப்பம்சங்களை விவரிக்குக.

(20 புள்ளிகள்)

**8.** இந்துக்களின் ஆச்சிரமதர்மத்தின் அடிப்படைகளை விளக்கி, இன்றைய நிலையில் அதன் பொருத்தப்பாடு குறித்து விவரிக்குக.

(20 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library